**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** ***86*** **நாள் :** ***26.04.2024***

**கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புதுவாழ்வு சிறப்பு முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொடுங்கையூர், மீனாம்பாள் சாலை, எஸ்.கே.மஹாலில் நடைபெற்ற கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கான புதுவாழ்வு சிறப்பு முகாம் நிகழ்வினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று *(26.04.2025)* தொடங்கி வைத்து, அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்படும் சிறப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த முகாமானது, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து வடசென்னையில் வசிக்கும் கந்தல் சேகரிப்பாளர்களுக்காக *(Rag Pickers)* கொடுங்கையூர் எஸ்.கே.மஹாலில் காலை *8* மணி முதல் பிற்பகல் *2* மணி வரை நடத்தப்பட்டது.

இந்த முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தொழிலாளர் துறை, சமூக நலத்துறை, தமிழ்நாடு உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வருவாய்த்துறை, முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சேவைகள் வாயிலாக *265* எண்ணிக்கையிலான கந்தல் சேகரிப்பாளர்களுக்கு மருத்துவ முகாம், ஆதார் அட்டை பெறுதல், வாக்காளர் அடையாள அட்டை, பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ், வீட்டுவசதி, திறன் பயிற்சி, வேலைவாய்ப்பு முகாம், வங்கி சேவைகள் மற்றும் சமூக பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கு நேரடி அணுகல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொடுங்கையூர் பயோ மைனிங் திட்டத்தின் கீழ், நீண்டகால கந்தல் சேகரிப்பாளர்களை ஒருங்கிணைப்பதற்காக அண்ணா பல்கலைக்கழகம் மூலம் பயிற்சி பெற்ற தன்னார்வலர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டு, கந்தல் சேகரிப்பாளர்களுக்கும், அரசு நல அமைப்புகளுக்கும் இடையிலான இடைவெளியை குறைத்து, அரசின் நலத்திட்ட உதவிகள் சென்றடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். டி. சேகர், ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திரு. நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர் திரு.ஜெ. டில்லி பாபு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**